# NEWSLETTER

**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

**MARCH 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION



## சேவையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை



தற்போதைய சூழ்நிலையில் தடுமாறும் இளைஞர் யுவதிகள், பாடசாலையினை விட்டு இடைவிலகிய மாணவர்கள் உயர்தரம், சாதாரண தர பரீட்சை போன்றவற்றில் சித்தியடையாத மாணவர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் போன்றவற்றை வலுவூட்டுவதற்காகவும் இளவயது திருமணத்தினைத் தடுத்து அவர்களின் தொழிலுக்கான வழிகாட்டுதலை வழங்கும் வண்ணம் அவர்களுக்கான சமுதாயக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கும் அவர்களின் மனப்பாங்கினை மாற்றியமைக்கும் வகையில் மென்திறன் பயிற்சி வழங்குவதற்குமான பயிற்சி நெறியானது (TOT)
சென்னையில் மண்டவெளிப்பாக்கத்தில் அமைந்துள்ள தியான ஆசிரமத்தில் இடம்பெற்றது.

எமது சேவையாளர்கள் ஏழு பேர் இந்தியா சென்று இப்பயிற்சியில் கலந்துகொண்டதுடன் சமுதாய கல்லூரி பற்றிய அறிவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த வருடம் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையிலும் எமது சேவையாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சியினை இந்திய சமுதாயக் கல்லூரிகள் ஆராய்ச்சி வளர்ச்சி மையம் (ICRDCE) மற்றும் United Board For Christian Higher Education in Asia ஆகிய நிறுவனங்கள் இணைந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுடனான கலந்துரையாடல்

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் 13.03.2024 அன்று இடம்பெற்றது. விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் திரு.சுப்பிரமணியம் ராஜு கபீரியல் அவர்கள் இதனை செவ்வனே நடாத்தியிருந்தார்.





## நன்கொடையாளரின் பிறந்த தினக்கொண்டாட்டம்

எமது அறக்கட்டளை உறவுகளான **கனடாவில் வசிக்கும் திரு.திருமதி.யோகநாதன் மனோரஞ்சிதம் அவர்களின் பேரனாகிய செல்வன்.அஷ்வின் சுரேஷ்** அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் எமது மாதிரிப் பாலர் பாடசாலையான ஆரையம்பதி/திருநீற்றுக்கேணி/நலன்புரி பாலர் பாடசாலையில் 20.03.2024 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.


# Top news

## விவேகானந்த குடும்பத்தினரின் மகளிர் தினக் கொண்டாட்டம்



எமது விவேகானந்த குடும்பத்தின் மகளிரை கௌரவிக்கும் வண்ணம் மகளிர் தினம் 18.03.2024 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டதோடு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா நிறுவனம், சமூக நலன்புரி அமைப்பு உள்ளிட்ட அனைத்து சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். பெண்களின் முக்கியத்துவம் மற்றும் சமகாலப் பெண்களின் சமூகத்திற்கான பங்களிப்பு தொடர்பில் எமது நிறைவேற்றுப் பணிப்பாளரால் சிறப்பாக உரையாற்றப்பட்டதோடு விவேகானந்த குடும்பத்தின் பெண்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுச்சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது.








## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

எமது திட்டத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இவ்வாண்டிற்குரிய இரண்டாவது கலந்துரையாடல் 28.03.2024 அன்று எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் தலைமையில் இடம்பெற்றது. எமது 5 பாலர் பாடசாலைகளிலும் கற்பிக்கும் 7 ஆசிரியர்களும் கலந்துகொண்டதோடு, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக அடிப்படைக் கணினி மற்றும் அடிப்படை ஆங்கில வகுப்புகள் ஆரம்பித்தலைப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



# வாழ்வியல் பயிற்சியும் வழிகாட்டலும்



## சிறுவர்களுக்கான வாழ்வியல் பயிற்சி

பழுகாமம்/கண்டுமணி மகாவித்தியாலத்தில் கல்வி பயிலும் தரம் 6 மாணவர்களுக்கான வாழ்வியலும் வழிகாட்டலும் பயிற்சிநெறியானது 30.03.2024 அன்று பழுகாமத்தில் இடம்பெற்றதோடு அவர்களுக்கான புத்தாக்க சிந்தனைகள் பல்வேறு செயற்பாடுகளுடாக மிகவும் சிறப்பான முறையில் எமது சேவையாளர்களால் நடாத்தப்பட்டது.



## இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினரின் திருமணநாள் கொண்டாட்டம்

இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர் திரு.சிவலோகன் அவர்களின் திருமணநாள் கொண்டாட்டமானது அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் 31.03.2024 அன்று இடம்பெற்றது. சாரதா நிலையத்தில் வசிக்கும் 60 மாணவர்களும் ஏனைய சேவையாளர்களும் இணைந்து இந்நிகழ்வை மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடினர்



## மேலும் ஒரு மாணவிக்கான ஊக்குவிப்புத்தொகை

எமது மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் திட்டத்தினூடாக ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கான முதற்கட்ட தொகை வழங்கும் நிகழ்வு 15.03.2024 அன்று இடம்பெற்றது. ஆரையம்பதி இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றதோடு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எமது அறக்கட்டளை உறவும் அவரால் பொறுப்பெடுக்கப்பட்ட மாணவியும் வருமாறு

- **சின்னத்தம்பி செந்தில்செல்வன், கனடா** = செல்வி.ரவிச்சந்திரன் சுகிர்தா

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் பங்குனி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்



